## இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகம் - 2016

இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் ("நிறுவகம்") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உறுப்பினர் நிதியங்களின் மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானதும் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட காலப்பகுதியுடன் தொடர்புடைய வருமானம் மற்றும் செலவினம் மாத்திரம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 201,691 தொகை மற்றும் எதிர்வரும் ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 21,760 தொகையான இணையத்தள புதுப்பித்தல் கட்டணம் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கருதப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானத்தின் பிழையான கணக்கீடு காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான வைப்புக்கள் ரூபா 102,706 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

ரூபா 207,800 கூட்டுத்தொகையான பெறவேண்டியவைகள் அறவிடப்பட்டிராது ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு மேலாக கணக்குகளில் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 43,400 பெறுமதியுடைய பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

நிலையான வைப்புக் கணக்கதில் ரூபா 1,000,000 தொகையொன்றை வைப்புச் செய்வதற்கு மற்றும் நிர்வாக உதவியாளர்கள், நிறுவகம் சார்பில் பணிக்கொடை நிதியொன்றை ஸ்தாபிப்பதற்கு 2016 சனவரி 25 இல் நிறுவகத்தின் சபை தீர்மானித்திருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 வரையிலும் இந்த தீர்மானத்துடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளை முன்னைய ஆண்டிற்கான ரூபா 957,662 ஆன நேரொத்த தேறிய மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 675,695 ஆன மிகையொன்றை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 281,967 பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை மற்றும் செயற்பாட்டு வருமானம் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளில் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணங்களாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் தொழிற்பாடுகள் ரூபா 675,695 ஆன மிகையொன்றாக மாத்திரம் காட்டப்பட்டிருந்த போதிலும், தனிநபர் ஊதியங்கள் மற்றும் பொறுமானத்தேய்வு என்பவற்றை கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் பெறுமதி சேர்க்கை ரூபா 970,970 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு வருமானம் குறைவடைந்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பெறுமதி சேர்க்கை ரூபா 254,708 இனால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தலைமை அலுவலக கட்டிடத்தின் ஆரம்ப வேலைகளுக்கு ஏற்பட்ட ரூபா 342,400 தொகையொன்று 2009 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறை வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆரம்ப வேலைகள் நடாத்தப்பட்ட குத்தகை உடன்படிக்கையினை ரத்துச்செய்து காணியை கையேற்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்திருந்ததுடன் இந்த நோக்கத்திற்கு மற்றுமொரு காணியை கையளித்திருந்தது. ஆகையினால், ஆரம்ப வேலைகளுக்கு ஏற்பட்ட தொகை பயனற்ற செலவினமொன்றாகியது.

*''யூடீஏ'' அதனை ஈடு செய்வது சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றமையினால், இந்த ஆதனத்தின் மீது நிறுவகத்தினால் செலவிடப்பட்ட தொகை பதிவழிக்கப்படவுள்ளதென, நிறுவகத்தின் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.*

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு

கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன எதிர்கால செயற்பாடுகளினை முற்கணிப்பதற்கு மற்றும் எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகளினை வினைத்திறனாக அடைவதற்கான வழிகாட்டல்களினை வழங்குவதற்கு உதவுகின்றது. இருப்பினும், 2016 ஆம் ஆண்டினை இலக்குவைப்பதன் மூலம் நிறுவகத்தினால் இவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. முறையான செலவின கணக்கீட்டின் மீதான கட்டுப்பாடு தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.